கோ.ம.சா.1– ரெங்கராஜன் L.A.O.P.No.581/2022 24.11.2025

எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை –

சர்வே எண்.280/7 மற்றும் 280/8 ல் கண்ட நிலங்கள் செட்டில்மெண்ட் காலத்தில் அனாதீனம் என வகைப்பாடு செய்யப்பட்டிருந்தது என்றால் எங்களுக்கு தெரியவில்லை. மேற்படி சொத்துக்கள் நான் தாக்கல் செய்த கோ.சா.ஆ.1 ஆவணத்தின்படி ஆழ்வார்சாமி பெயரில் இருந்து வருவதாக கண்டிருக்கிறது என்றால் சரிதான். அனாதீனம் என்ற வகைப்பாட்டிலிருந்து ஆழ்வார்சாமி நாயுடு என்பவர் பெயருக்கு எவ்வாறு மாற்றம் செய்யப்பட்டது என்ற விபரத்திற்குரிய ஆவணம் என்னிடம் இல்லை என்றால் சரிதான். இந்த வழக்கில் கண்ட கோருரிமையாளர்கள் நாங்களும், மற்ற கோருரிமையாளர் இறந்த போன ஆழ்வார்சாமியின் நேரடியான வாரிசுகள் கிடையாது என்றால் சரிதான். இவ்வழக்கில் கண்ட நிலங்கள் ஆர்ஜிதம் செய்யப்பட்டு அறிவிப்பு வந்த போது இவ்வழக்கில் குறிப்பிட்டுள்ள கோ.சா.ஆ.1 முதல் கோ.சா.ஆ.26 வரையிலான ஆவணங்களை ஆர்ஜித அதிகாரி முன்பு ஆஜர் படுத்தவில்லை என்று சொன்னால் சரிதான். நான் ஆழ்வார்சாமி நாயக்கர் விபத்தில் இறந்ததன் அடிப்படையில் தாக்கல் செய்யப்பட்ட மோட்டார் வாகன விபத்து வழக்கில் நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பின் அடிப்படையில் ஆர்ஜித நிலத்திற்குண்டான நஷ்ட ஈடு தொகையை கோரினோம் என்றால் சரிதான். ஆழ்வார்சாமியின் இறப்பை பொறுத்து எதிர்மனுதாரர் கோரிக்கையை நிராகரித்த பின்புதான் ஆழ்வார்சாமியின் 2ம் நிலை வாரிசுகள் நானும், இந்நிர் வழக்கின் இதர கோரிருமையாளர்கள் என்றும் தீர்ப்பு பெற்றுள்ளோம் என்றால் சரிதான். ஆர்ஜித அதிகாரி ஆர்ஜித நிலம் செட்டில்மெண்ட் காலத்தில் அனாதீனம் வகைப்பாடு செய்யப்பட்டிருந்து, தவறுதலாக ஆழ்வார்சாமி பெயரில் நில உடைமை மேம்பாட்டு திட்டத்தின்படி பட்டா ஏற்படுத்தப்பட்டதால்தான் ஆர்ஜித நிலத்திற்கு உண்டான இழப்பீட்டு

தொகையை நீதிமன்றத்தில் வைப்பீடு செய்தார் என்றால் சரியல்ல. ஆர்ஜித நிலம் ஆதியில் அனாதீனம் என்பதால் ஆர்ஜித நிலத்திற்குண்டான இழப்பீடு தொகை எனக்கு கிடைக்கத்தக்கதல்ல என்று சொன்னால் சரியல்ல.

மறு விசாரணை – இல்லை

என்னால் திறந்த நீதிமன்றத்தில் பதிவு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு சரி என்று ஒப்புக்காள்ளப்பட்டது.

முதன்மை மாவட்ட நீதிபதி,
ஸ்ரீவில்லிபுத்தூர்.